සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

Islam

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 9	இஸ்லாம்

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. ரிஸாலத் என்ற பதத்தின் பொருள்,
1. ஏகத்துவம் 2. தூதுத்துவம் 3. மறுமை 4. மறைவான விடயம்

02. சேர்த்தும் சுருக்கியும் தொழ முடியாத தொழுகை,
1. ஸுபஹ் 2. லுஹர் 3. ம.்ரிப் 4. இஷா

03. நரகத்திற்கு குறிப்பிடப்படும் பெயர் அல்லாதது,
1. ஜஹன்னம் 2. ஜன்னா 3. ஜஹீம் 4. நார்

04. அகீதாத் துறை அறிஞர்கள் அஸ்மாஉல் ஹுஸ்னாக்களை பொருளை அடிப்படையாகக் கொண்டு எத்தனையாக வகைப்படுத்தினர்?
1. 2 2. 3 3. 4 4. 5

05. இஸ்தி.்பார் என்பதன் பொருள் யாது?
1. பிரார்த்தனை 2. பொறுப்புச் சாட்டல்
3. இறைத் திருப்தி 4. பாவ மன்னிப்பு

06. ஜாமிஉல் குர்ஆன் என்ற சிறப்புப் பெயருக்குரியவர்,
1. அபூபக்கர் (ரழி) 2. உஸ்மான் (ரழி)
3. உமர் (ரழி) 4. அலி (ரழி)

07. உம்முல் மஸாகீன் என்ற சிறப்புப் பெயருக்குரியவர்,
1. ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) 2. ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)
3. மய்மூனா (ரழி) 4. உம்மு ஹபீபா (ரழி)

08. இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தனது நூலில் பதிவு செய்த ஹதீஸ்களின் எண்ணிக்கை,
1. 4000 2. 4800 3. 6570 4. 7275

09. ஜனாஸாத் தொழுகையில் மூன்றாம் தக்பீருக்குப் பின்,
1. ஸுறா பாத்திஹா ஓதல் 2. மையித்துக்காக பிரார்த்தனை
3. நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் 4. ஸலாம் கூறல்

10. "நீங்கள் …….. கடைப்பிடித்து ஸக்காத்தும் கொடுத்து வாருங்கள்" என்ற அல்குர்ஆன் வசனத்தில் குறுப்பிடப்பட்ட விடயம்,
1. தொழுகை 2. நோன்பு 3. ஸதகா 4. ஹஜ்

11. ஹஜ்ஜின் பர்ளுகளில் அல்லாதது,
1. நிய்யத் வைத்தல் 2. ஒழுங்குமுறையாகச் செய்தல்
3. ஸ.்ய செய்தல் 4. மினாவில் கல்லெறிதல்

Past Papers Wiki

12. "கொன்ஸ்தாந்து நோபிள் ஒரு வீரனால் வெற்றி கொள்ளப்படும் அந்தத் தளபதிதான் சிறந்த தளபதி அந்த சேனைதான் சிறந்த சேனை" என்ற ஹதீஸை உண்மைப்படுத்திய தளபதி,
1. ஸலாஹுத்தீன் அய்யூபி
2. தாரிக் பின் ஸியாத்
3. முஹம்மத் அல் பாதிஹ்
4. முஹம்மத் பின் காஸிம்

13. "முஹம்மதின் தோழர்கள் முஹம்மதை நேசிப்பது போன்று மனிதர்களில் எவரும் மற்றொரு மனிதனை நேசிப்பதை நான் காணவில்லை" எனக் கூறியவர்,
1. அபூ ஸுப்யான்
2. அபூ ஜஹ்ல்
3. வலீத் பின் முகீரா
4. உமையா பின் கலப்

14. மூஸா (அலை) அவர்கள் நபியாக தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வு நடந்த இடம்,
1. ஜபலுன் நூர்
2. தூர்ஸீனா மலை
3. ஜுதி மலை
4. தவர் குகை

15. ஸுல்தான் ஸலாஹுத்தீன் தலைமையிலான படை பைத்துல் முகத்தஸை வெற்றிகொண்ட ஹிஜ்ரி ஆண்டு,
1. ஹிஜ்ரி 494
2. ஹிஜ்ரி 570
3. ஹிஜ்ரி 475
4. ஹிஜ்ரி 583

16. ஹஜ் கடமையை நிறைவேற்றுவதால் ஏற்படும் சமூகப் பயன்,
1. நன்மை கிடைக்கும்.
2. பாவங்கள் மன்னிக்கப்படும்.
3. பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படும்.
4. சகோதரத்துவப் பண்பு வளரும்.

17. பின்வரும் உம்மஹாத்துல் மு.ஃமீன்களில் அபூ ஸுப்யானின் மகள்,
1. உம்மு ஹபீபா (ரழி)
2. மய்மூனா (ரழி)
3. ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)
4. ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி)

18. கழா கத்ர் பற்றிய பிழையான கூற்று,
1. அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கின்றன.
2. மனிதன் செயற் சுதந்திரம் உடையவன்.
3. மனிதன் செய்யும் நன்மை தீமைக்கு அல்லாஹ்வே காரணமாகும்.
4. மனிதனின் செயலுக்கு மனிதனே பொறுப்பாளியாவான்.

19. வளர்ப்பு மகன் விவாகரத்துச் செய்த மனைவியை வளர்ப்புத் தந்தைக்கு திருமணம் செய்துகொள்ள முடியும் என்ற கட்டளை இறங்கிய ஸுறா,
1. அல் மாயிதா
2. அஹ்ஸாப்
3. அத்தலாக்
4. அந்நூர்

20. பின்வரும் சொற்தொகுதிகளில் நேர் எதிர் கருத்தை தரும் சொற்தொகுதி,
1. துன்யா – ஆகிரா
2. துஆ - இஸ்தி.ஃபார்
3. அர்கான்கள் - வாஜிபுகள்
4. ஸக்காத் - ஸதகா

21. பின்வரும் சமயம் சார்ந்த கூற்றுக்களில் பிழையானது.
1. இந்து சமய வேதங்கள் - இருக்கு, யசுர், சாமம், அதர்வம்
2. கிறிஸ்தவ சமயம் - ஈஸா நபியை இறைத்தூதர் என நம்புதல்.
3. அல்குர்ஆன் - முஸ்லிம்களுக்கு மாத்திரமின்றி அனைவருக்குமான புனித நூல்.
4. வெசாக் தினம் - புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல், பர்நிர்வாணம் அடைதல்.

22. அன்னை மைமூனா (ரழி) அவர்கள் அறிவித்த ஹதீஸ்களின் எண்ணிக்கை ஏறத்தாழ,
1. 80
2. 56
3. 76
4. 65

23. மக்காவில் வஹி இறங்கப்பட்ட கால அளவு.
1. 10
2. 23
3. 53
4. 13

24. அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் தொகுப்பதற்கு காரணமாக இருந்த யுத்தம்.
1. யமாமா
2. ஆர்மீனியா
3. உஹத்
4. ஸிப்பீன்

25. துல்ஹஜ் பிறை 11, 12, 13 நாட்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. அய்யாமுல் பீழ்
2. அய்யாமுல் தஷ்ரீக்
3. அய்யாமுல் ஸு.த்
4. யவ்முல் அரபா

26. சேர்த்து சுருக்கித் தொழுவது அறபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
1. அல்ஜம்உ
2. அல் ஜம்உ வல் கஸ்ர்
3. ஜம்உத் தக்தீம்
4. ஜம்உத் த.்கீர்

27. 'லப்ளுள் ஜலாலாஹ்' என அழைக்கப்படுவது,
1. அல் மலிக்
2. அல் அஸீஸ்
3. அல் கபீர்
4. அல்லாஹ்

28. "மண்ணிலுள்ள மனிதர்களை நேசித்தால் விண்ணில் உள்ள இறைவன் உங்களை நேசிப்பான்" என்பது,
1. அல்குர்ஆனின் கூற்றாகும்.
2. நபி (ஸல்) அவர்களின் கூற்றாகும்.
3. ஸஹாபாக்களின் கூற்றாகும்.
4. மார்க்க அறிஞர்களின் கருத்தாகும்.

29. உமர் (ரழி) அவர்கள் "உனக்கு கவர்னர் மகன் எப்படி அறைந்தாரோ அப்படி ஓர் அறையை கவர்னரின் மகனின் கன்னத்தில் விடு" என கட்டளைப் பிறப்பித்தார். இதில் குறிப்பிடப்பட்ட கவர்னர்,
1. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)
2. ச.்த் இப்னு அபிவக்காஸ் (ரழி)
3. அம்ர் இப்னு ஆஸ் (ரழி)
4. அனஸ் இப்னு மாலிக் (ரழி)

30. மதீனா சாசனம் கி.பி. எத்தனையாம் ஆண்டு இடம் பெற்றது?
1. கி.பி. 630
2. கி.பி. 632
3. கி.பி. 622
4. கி.பி. 620

31. ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம்,
1. தௌராத்
2. ஸபூர்
3. இன்ஜீல்
4. புர்கான்

32. பனூ இஸ்ரவேலர்களை அடிமைப்படுத்திய எகிப்திய மன்னன்,
1. பிர்அவ்ன்
2. நும்ரூத்
3. ஹாமான்
4. காரூன்

33. இமாம் நபவி (ரஹ்) அவர்கள் எழுதிய அல் மின்ஹாஜ் எனும் ஹதீஸ் விளக்கவுரை நூல் எக்கிரந்தத்துக்கு எழுதப்பட்டது?
1. ஸஹீஹ் புஹாரி
2. ஸஹீஹ் முஸ்லிம்
3. ஜாமிஉத் திர்மிதி
4. ஸுனன் அபூதாவூத்

34. ஹஜ் கடமையாக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு,
1. ஹிஜ்ரி – 07
2. ஹிஜ்ரி – 08
3. ஹிஜ்ரி – 09
4. ஹிஜ்ரி – 10

35. ஈமான் கொள்ள வேண்டிய விடயங்களில் மூன்றாவது அம்சம்,
1. இறுதிநாளை ஈமான் கொள்ளல்.
2. மலக்குமார்களை ஈமான் கொள்ளல்.
3. ரஸுல்மார்களை ஈமான் கொள்ளல்.
4. வேதங்களை ஈமான் கொள்ளல்.

36. "ஷபாஅத்துல் குப்ரா" என்பதன் பொருள்,
1. மன்றாட்டம்
2. பெரிய மன்றாட்டம்
3. சிறிய மன்றாட்டம்
4. பெரிய இணைவைப்பு

37. அல்லாஹ்வை ஈமான் கொள்ளும் போது அவனுக்கே உரிய பண்புகளை முழுமையாக நம்ப வேண்டும். இதில் பண்புகளைக் குறிக்கப் பயன்படும் சொல்,
1. இல்ம்
2. இராதத்
3. குத்ரத்
4. ஸிபாத்

38. மர்யம் (அலை) அவர்களை சிறுமியாக இருந்தபோது அவரைப் பொறுப்பெடுத்தவர்,
1. யூசுப் (அலை)
2. இப்ராஹீம் (அலை)
3. ஸகரிய்யா (அலை)
4. ஷுஐப் (அலை)

39. ஸுரா லுஹாவின் "வஅம்மஸ் ஸாஇல பலா தன்ஹர்" என்ற வசனத்தின் பொருள்,
1. யாசிப்போரை விரட்டாதீர்.
2. அநாதையைக் கடிந்து கொள்ளாதீர்.
3. உம்மை வழியற்றவராகக் கண்டு நேர்வழியில் செலுத்தினான்.
4. உம்மைத் தேவையுடையவராகக் கண்டு தேவை இல்லாதவராக்கினான்.

40. மக்கா காபிர்கள் துன்புறுத்திய வேளையிலும் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்தும் விதமாக "அவர் இருக்கின்ற இடத்தில் அவரது காலில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்புவதில்லை" எனக் கூறிய ஸஹாபி,
1. ஸைத் பின் தஸினா (ரழி)
2. அம்மார் பின் யாஸிர் (ரழி)
3. பிலால் (ரழி)
4. ஸைத் பின் ஹாரிஸா (ரழி)

(1x40=40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01) சுருக்கமான விடை தருக.
1. அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் இரண்டைக் குறிப்பிட்டு, அதன் பொருளையும் எழுதுக.
2. ஈஸா (அலை) அவர்களின் சீடர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?
3. ஹலால், ஹராம் என்பதன் பொருள் யாது?
4. உடையுடன் தொடர்பான ஹராமான விடயங்கள் இரண்டு குறிப்பிடுக.
5. நீண்ட கையை உடையவர் என்ற சிறப்புப் பெயருக்குரிய அன்னையர் யார்?
6. மூஸா (அலை) அவர்களின் சகோதரர் யார்?
7. மஹப்பதுர் ரஸுல் என்பதன் பொருள் யாது?
8. அறபா தினம் எப்போது?
9. முதபகுன் அலைஹி என்பதன் மூலம் நாடப்படுவது யாது?
10. வஹியை எழுதுவோர் எவ்வாறு அழைக்கப்படுவர்?

(2 x 10 = 20 புள்ளிகள்)

02) 1. பாவ மன்னிப்பை வலியுறுத்தும் அல்குர்ஆன் ஆதாரமொன்று குறிப்பிடுக.
2. ஜனாபத்தை ஏற்படுத்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.
3. ஸக்காத்தை முறையாக நிறைவேற்றுவதால் கிடைக்கும் நன்மைகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. ஸுரா லுஹா எத்தனையாம் அத்தியாயம் மற்றும் அதன் ஆயத்துக்களின் எண்ணிக்கையை முறையே குறிப்பிடுக.
2. மறுமையின் நிகழ்வுகள் மூன்றைக் குறிப்பிடுக.
3. இன நல்லுறவைப் பேண கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. அல்லாஹ் வழங்கிய இரு நி.ஃமத்களில் அதிகமானவர்கள் கவனயீனமாக இருப்பார்கள் என்று குறிப்பிட்ட விடயங்கள் எவை?
2. ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் மூன்று தருக.
3. சிக்கனம், சேமிப்பு மூலம் கிடைக்கும் பயன்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. கழா கத்ர் என்பதன் பொருளை குறிப்பிடுக.
2. இஹ்ராம் தரித்த பின் தவிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்று தருக.
3. ஐந்து விடயங்கள் நிகழ முன்னர் ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட விடயங்கள் எவை?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நான்கையும் குறிப்பிடுக.
2. சுவனத்தில் அனுபவிக்கும் இன்பங்கள் மூன்று தருக.
3. மஸ்ஜிதில் பேண வேண்டிய ஒழுங்குகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) 1. மஸ்ஜிதில் நுழையும் போது ஓதும் துஆவைக் குறிப்பிடுக.
2. மஹ்ரமின் வகைகள் எவை?
3. நபி (ஸல்) அவர்களின் தேசப்பற்றை வெளிப்படுத்தும் சம்பவம் ஒன்று குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - இஸ்லாம்

ISLAM விடைப்பத்திரம் - தரம் - 9

பகுதி – I

1. 2	11. 4	21. 2	31. 3
2. 1	12. 3	22. 3	32. 1
3. 2	13. 1	23. 4	33. 2
4. 3	14. 2	24. 1	34. 3
5. 4	15. 4	25. 2	35. 4
6. 2	16. 4	26. 2	36. 2
7. 1	17. 1	27. 4	37. 4
8. 4	18. 3	28. 2	38. 3
9. 2	19. 2	29. 3	39. 1
10. 1	20. 1	30. 3	40. 1

பகுதி – II

(01)

1. 99 அஸ்மாஉல் ஹுஸ்னாவில் எதுசரி இரண்டைக் குறிப்பிட்டு, அதன் பொருளை எழுத வேண்டும்.
   (உ + ம்) அர் ரஹ்மான் - அளவற்ற அருளாளன்
   அர்ரஹீம் - நிகரற்ற அன்புடையோன்
2. ஹவாரிய்யூன்கள்
3. ஹலால் - மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விடயம்.
   ஹராம் - மார்க்கத்தில் தடுக்கப்பட்ட விடயம்.
4. - ஆண்கள் பட்டாடை, தங்க ஆபரணங்கள் அணிதல்.
   - ஆண்கள் பெண் வேடத்திலும், பெண்கள் ஆண் வேடத்திலும் உடையணிதல்.
   - இஸ்லாமிய வரையறைகள் பேணப்படாத ஆடைகள்.
5. ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)
6. ஹாரூன் (அலை)
7. நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பு
8. துல்ஹஜ் பிறை 9
9. ஸஹீஹ் புஹாரி மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் இவ்விரு கிரந்தங்களிலும் ஒரே விதமாகப் பதியப்பட்டுள்ள ஹதீஸ்கள்.
10. குத்தாபுல் வஹி

(02)

1. - "விசுவாசிகளே! நீங்கள் அனைவரும் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருங்கள்" (22 : 31)

   - "விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்விடம் மிகத் தூய்மையாகவும் உண்மையாகவும் பாவமன்னிப்பு கோருங்கள்" (66 : 8)

   - "தமக்குத்தாமே தீங்கிழைத்துக்கொண்ட எனது அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் அருளிலிருந்து நிராசையாகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கிறான்" (39 : 53)
   (இது போன்ற பொருத்தமான வசனம் எழுதப்பட்டிருப்பின்)

2. ஒரு முஸ்லிம் மரணமடைதல், தூக்கத்தில் அல்லது விழிப்பில் இந்திரியம் வெளியாதல், உடலுறவு கொள்ளல், ஹைழ் மற்றும் நிபாஸ் ஏற்படல்.

Past Papers Wiki

3. - ஸக்காத் வழங்குபவரின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைகின்றது.
   - செல்வம் பாதுகாப்பு பெறுகின்றது.
   - உள்ளமும் பொருளும் தூய்மை அடைதல்.
   - தியாகம், பிறர் நலம் பேணல் போன்ற நற்குணங்கள் வளர்ச்சி.
   - சுயநலம், கர்வம், கருமித்தனம் போன்ற துர்க்குணங்கள்.

(03)

1. 93 ஆவது அத்தியாயம்
   ஆயத்துக்களின் எண்ணிக்கை – 11

2. - ப.ஃஸ் - மீண்டும் எழுதப்படல்.
   - மஹ்ஷர் - அனைவரும் ஒன்றுகூடுவர்
   - ஹிஸாப் - மனிதன் செய்த செயல் குறித்தான விசாரணை இடம்பெறும்.

3. - எல்லா இனங்களுக்கிடையில் நீதமாக நடந்துகொள்ளல்.
   - ஒவ்வொரு மதத்தவர்களின் உரிமைகளையும் அவர்களுக்கான சுதந்திரத்தையும் வழங்கல்.
   - அவர்களின் உணர்வுகளை மதித்து நடத்தல்.
   - தேவையான சந்தர்ப்பங்களில் உதவி ஒத்தாசை புரிதல்.
   - தவறுகளின் போது மன்னித்து, மன்னிப்பு கேட்டு பெருமனதுடன் நடந்துகொள்ளல்.
     (பொருத்தமான விடை)

(04)

1. ஆரோக்கியமும் ஓய்வும்
2. - மரணித்தவர்களை உயிர்ப்பித்தல்.
   - பிறவிக் குருடர்களை குணப்படுத்தல்.
   - வீட்டில் மறைவாக வைக்கப்பட்டுள்ள பொருட்களைச் சரியாக அறிவித்தல்.
3. - வீண்விரயம் தவிர்க்கப்படும்.
   - எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ முயற்சிப்பர்.
   - சேமிக்கும் பழக்கம் உண்டாதல்.
   - கஷ்டமான சந்தர்ப்பங்களில் சேமிப்பு உதவியாக அமைதல்.
   - மறுமையில் இது பற்றிய விசாரணையிலிருந்து நீங்கிக் கொள்ளல்.
     (பொருத்தமான விடை)

(05)

1. கழா கத்ர் - தீர்ப்பளித்தல், நிறைவேற்றல், படைத்தல், நிர்ணயித்தல், முன்னேற்பாடு

2. முடியை சிரைத்தல்/ வெட்டுதல், நகம் வெட்டுதல், ஆண்கள் தமது தலையை மறைத்தல், ஆண்கள் தைத்த ஆடைகளை அணிதல், நறுமணம் பூசுதல், தரையில் வாழும் மிருகங்களை வேட்டையாடுதல், திருமணம் முடித்தல், தாம்பத்திய உறவில் ஈடுபடல்.

3. - மரணத்திற்கு முன்னர் வாழ்வு
   - நோய்க்கு முன் ஆரோக்கியம்
   - வேலைப்பளுவுக்கு முன்னர் ஓய்வு
   - முதுமைக்கு முன்னர் இளமை
   - வறுமைக்கு முன் செல்வம்

(06)

1. குளிப்பாட்டல், கபனிடல், தொழுவித்தல், அடக்கம் செய்தல்.
2. - நபிமார்கள், ஸித்திக்கீன்கள் மற்றும் ஷுஹதாக்கள் போன்ற உத்தமர்களுடன் இருப்பர்.
   - மாட மாளிகைகளில் சுவனவாசிகள் இருப்பர்.
   - விதவிதமான பழங்களையும் பறவைகளின் மாமிசங்களையும் புசிப்பர்.
     (இவைபோன்ற பொருத்தமான விடயங்கள்)
3. - வணக்கங்களை நிறைவேற்றல்.
   - தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுதல்.
   - தூய்மை பேணல்.
   - மஸ்ஜிதுக்குள் நுழையும் போதும் வெளியேறும் போதும் பிரார்த்தித்தல்.
   - மஸ்ஜிதில் அமைதி பேணல்.
   - அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்.

(07)

1. அல்லாஹும்ம இப்தஹ் லீ அப்வாப ரஹ்மதிக
2. குடும்ப உறவு, திருமண உறவு, பால்குடி உறவு
3. (134ம் பக்கம் - பாடத் தலைப்பு – தேசத்தின் மீது பற்றுக்கொள்ளல்)

අ.පො.ස [illegible] Past Papers Wiki [illegible]

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank